செம்மணி

நிலம் 3 துகள் 140 வள்ளுவர் ஆண்டு 2052, 25 - 31 பங்குனி 2023 வாரமலர் பக்கங்கள் 16

# இனவாதத்திலிருந்து அதியுச்ச இனவாதத்தை நோக்கி...!





உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன என்ற எதிர்பார்ப்பில் சிங்களக் கட்சிகள் பல களமிறங்கியுள்ளன. அவை எல்லாவற்றிலும் துருத்திக் கொண்டு முன்னால் நிற்கும் கட்சியாக ஜே.வி.பி. காணப்படுகிறது. தனக்கு இசைவான சில உதிரிக் கட்சிகளை இணைத்துக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கியிருக்கிறது. இந்த நிலையில் சிங்கள ஊர்கள் பலவற்றில் ஜே.வி.பி.க்கு என்றுமில்லாதவாறு ஆதரவு இந்தமுறை உள்ளது என்று அறிய முடிகிறது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன அடிப் படையில் சிங்கள இனவாதக் கட்சிகளே. அவற்றிலிருந்து சற்று வித்தியாசமாகக் கொமினிசக் கொள்கையுடன் இனவாதத்தைக் கடைப்பிடிக்கின்ற கட்சியாக ஜே.வி.பி. காணப்படுகிறது.

நீரஜா

**சிறுபான்மை இனங்கள் பற்றிச் சிந்திப்பதில்லை**

சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை இருக்கிறது என்று புதிதாகக் கேட்கின்றனர் ஜே.வி.பியினர். வடக்குக் கிழக்கு நிலம் தமிழர்களின் தாயக பூமி என்பதையோ தமிழ் மக்கள் தேசிய இனம் என்பதையோ அவர்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று அவசியம் என்பதையோ ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி வடக்குக் கிழக்கு என்று எல்லை ஒன்று இருப்பதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# திருநீறு-திருவள்ளுவர் மீதான திணிப்பு

மிக அதிகளவில் மொழி பெயர்க்கப்பட்டுப் பலரால் படிக்கப்படுகின்ற நூலுக்குச் சொந்தக்காரன்.
அறம், பொருள், இன்பம் என்கிற 3பெரும் விடயப்பரப்புகளை ஆயிரத்து 330 ஈரடிச் செய்யுள்களில் சுருங்கச் சொன்ன திறமைசாலி.
கருத்தாழமும், அர்த்தச் செறிவும் மிக்கதாக உலக வாழ்வு குறித்த பல விடயங்களை எடுத்துக்கூறியவர்.
மனித ஒழுக்கம், குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு எனப் பலகோணங்களில் பரந்து விரிந்த அறிவு கொண்டு எழுதியவர். இத்தனை பாண்டித்தியங்களையும் அறிவையும் கொண்டிருந்த அவர், தான் எந்த மதத்தவர் என்று எவ்விடத்திலும் கூறவில்லை. அவரது பெயர், தோற்றம், உருவச் சிலைகூட உண்மையான அதற்குரிய சொந்தக்கார மனிதனைத்தான் சுட்டுகிறதா என்பதே கேள்விக்குறி. உலக வாழ்வியல் குறித்த அதிக கருத்துக்களைக் கூறிச் சென்ற அவர் தனது மதம் குறித்து எவ்விடத்திலும் அலட்டிக்கொண்டதாக இல்லை. தனது அடையாளம், மதம் குறித்துத் துளியும் எண்ணாமல், வெளிப்படுத்தாமல் வாழ்ந்து மடிந்திருக்கிறார். அவருடைய சுருக்கச் செய்யுள்களுக்குப் பின்வந்தோர் விரிவுரைகள் எழுதிக் கருத்தும், அர்த்தமும் புனைந்திருக்கிறார்கள். அவை எந்தளவுக்கு அவருடைய செய்யுள்களுடன் பொருந்திப்போகின்றன என்பதுகூட எழுதியவருக்கே வெளிச்சம். இப்படியிருக்க, நாம் அவரது எழுத்துக்களுக்குள் பூதக்கண்ணாடிகளைப் போட்டுத் தேடியும், ஆழச் சுழியோடியும் அவரது அடையாளம் குறித்துத் தேடும் கீழ்த்தரச் சிந்தனைக்குள் சிக்கியிருக்கிறோம். இவ்வளவு பெரும் விடயங்களை உலகுக்கு எடுத்துச் சொன்ன அந்த மனிதர் வேண்டுமொன்றோ, தேவையில்லை என்றோ, கவனத்தில் எடுக்காமலோ விட்டுப்போனதை அவரோடு ஒப்பிடுகையில் சிற்றறிவுள்ள நாம் இப்போது கையில் தூக்கியிருக்கிறோம்.
ஆதி பகவன் யார் என்பதில் அடிபடுகிறோம்.
அவரது எழுத்துக்களுக்குள் எமது மதம் சார்ந்த சொல்லாடல்கள் இருக்கின்றனவா என்று கஸ்ரப்பட்டுத் தேடுகிறோம். புதிய கண்டுபிடிப்பாளர்கள்போல புனைவுகளைச் செய்யும் ஊகம் கற்பித்து நிற்கிறோம். அதில் அப்படியிருக்கிறது, இதில் இப்படிச் சொல்லியிருக்கிறார், இந்தச் சொல் இதைத்தான் குறிக்கிறது என்று வியாக்கியானங்கள் வேறு கற்பிக்கிறோம். ஆக, தனது அடையாளம் முக்கியமல்ல என்று வாழ்ந்த மனிதனைக் கொச்சைப்படுத்துகிறோம்.
தான் குறித்த அடையாளங்கள் இன்றி வாழ்ந்துபோயிருக்கிறார் அவர். அவர் உணர்த்திச் சென்ற விடயத்தைக் கைவிட்டு வேறு வித வெறி பிடித்திருக்கிறது நமக்கு.
இது ஒரு விளக்கத்துக்கு... மாத்திரம்....
புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்த மதத்தவர்...? திருவள்ளுவரைப் போல கஸ்ரப்பட்டு எல்லாம் கண்டுபிடிக்கவோ கதை புனையவோ தேவையில்லை. பலருக்கும் தெரியும் அவர் இந்து மதத்தவர் என்று. சரி... இப்போது பல வருடங்கள் ஆகிவிட்டன....
அவர் எந்த மதத்தவர் என்று இப்போதுள்ளவர்கள் பலருக்குத் தெரியாமல் போய்விட்டது. எனவே அவரது படத்துக்கு, உருவச் சிலைக்கு வீபுதி தரித்து வெளியிட்டு அவர் இந்து மதத்தவர் அல்லது சைவர் என்பதைப் பறைசாற்றுகிறார்கள். இது முறையா....? சரியா...? அப்படித் திருநீறு தரித்த அந்தப் படத்தை, சிலையை ஒருதடவை கற்பனை செய்துதான் பாருங்களென்...?
அவர் விரும்பாத.... அல்லது அவர் பின்பற்றாத... அல்லது அவர் அக்கறைப்படாத... அல்லது அவர் முன்னிலைப்படுத்தாத ஒன்றை பிறப்பால் அந்த மதத்தவர் ஆனார் என்பதற்காக நாம் முன்னெடுப்பது அந்தத் தனிநபர் மீதான திணிப்பில்லையா...? மதம் ஏது என்று தெரிந்தவர் மீதே அப்படி முன்னெடுப்பது தவறானது என்றானபின் எந்த மதம் என்பதே சந்தேகத்துக்குரியதாக இருக்கிற திருவள்ளுவருக்குத் திருநீறு பூசுவது சரியா...?
ஜடமாகிவிட்டார்கள் அல்லது எதிர்வினையாற்ற மாட்டார்கள் என்பதற்காக மற்றவர்களின் சுயத்தில் கை வைக்கலாமா...?

கழகத்தில் வைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு வந்த ஜே.வி.பி. அணியினரிடம் தமிழர் பிரச்சினை விடயத்தில் என்ன கருத்தை வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டபோது அது சார்ந்த எந்தப் புரிதலும் இல்லாமல் ஜே.வி.பியினர் இருந்தனர். வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் என்பதையும் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பிரச்சினை உள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு சிங்களத் தலைவர்களுடனும் தமிழ் மக்கள் இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்பில்லை - என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தார்கள் என்று அறியக் கிடைக்கிறது.

**ரோஹண விஜயவீர**
ரோஹண விஜயவீர என்பவர் ஆரம்பத்தில் சீனத் தரப்புக் கொமினிசச் சிந்தனைகளால் கவரப்பட்டவர். நாகலிங்கம் சண்முகதாசன் என்று பலராலும் அறியப்பட்ட சண்முகதாசனின் கட்சியில் இணைந்து ஆரம்பத்தில் செயற்பட்டார். சிலோன் வர்த்தக



கச் சம்மேளனம் என்ற பெயரில் பல்வேறு பொது வேலைநிறுத்தங்களில் சண்டுமுகதாசன் ஈடுபட்டார். 1947, 1953, 1955 ஆகிய காலகட்டங்களில் பெரும் மக்கள் அலை சிலோன் கொமினிஸ்ட் கட்சிக்கு இருந்தது. மாவோ சேதுங் என்ற மிகப் பெரிய சீனத் தலைவருடன் நேரடி உறவைப் பேணினார் சண்முகதாசன். தமிழ், சிங்களம், ஆங்கிலம், சீனமொழி ஆகியவற்றில் ஆழமான அறிவுடையவராகவும் இருந்தார். சண்முகதாசனின் இந்தப் பேரலையுடன் தன்னையும் இணைத்துக் கொண்ட ரோஹண விஜயவீர பின்னர் சண்முகதாசனை விட்டுப் பிரிந்து சென்று ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி) உருவாக்கினார்.

**ஜே.வி.பியின் போராட்டங்கள்**
1971ஆம் ஆண்டு சேகுவாரா போராட்டம் என்ற தலைப்பில் சிங்கள இளைஞர்களை இணைத்து அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றை ரோஹண விஜயவீர நடத்தினார். அப்பேதைய தலைமை அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்காவால் அது ஒடுக்கப்பட்டது. சிங்கள இளைஞர் யுவதிகள் 14ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இந்தப் போராட்டத்தில்



தற்போது அனுரகுமார திசாநாயக்கா தலைமையில் ஜே.வி.பி. மிகப் பெரிய மக்கள் எழுச்சியைப் பரவலாகக் கட்டி வருகிறது. சிறுபான்மை இனங்கள் தொடர்பில் சாதகமான எந்த நிலைப்பாட்டையும் எடுக்காத நிலையில் சிங்கள மக்களில் பலர் ஜே.வி.பி.யை ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மகிந்த தரப்பினரின் ஊழல்களை விசாரித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவோம் என்றும் குடும்ப ஆட்சியை இல்லாது ஒழிப்போம் என்றும் அனுரகுமார திஸாநாயக்கா கூறிவருவது சிங்கள மக்களை ஓரளவுக்குத் திசை திருப்பியிருக்கிறது. அதேவேளை தமிழருக்கு 13உம் இல்லை அதற்குக் கீழும் தீர்வில்லை என்ற நிலைப்பாட்டை ஜே.வி.பியுடனான சிங்கள மக்களின் எழுச்சி ஏற்படுத்தப் போகிறது.

தாம் மட்டுமே இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்க வேண்டும் என்பதைச் சிங்கள மக்கள் 2019 அரசதலைவர் தேர்தலுடன் முடிவெடுத்தார்கள். கோட்டாபயவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னரும் அதேநிலைப்பாட்டிலேயே உள்ளனர். இதற்கு ஜே.வி.பி.யின் இனவாதத்தைக் கக்கும் புதிய பரப்புரை யுக்தி சிங்கள மக்களுக்குத் தீனிபோட்டிருக்கிறது. இந்தமுறை ஜே.வி.பிக்கு வாக்களித்துப் பார்ப்போம் என்ற நிலையில் சிங்கள மக்கள் இருப்பது தெரிகிறது.

கடந்த 15ஆம் திகதி நடந்த நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டத்தில் ஜே.வி.பியினர் கலந்து கொள்ளவில்லை. பலர் சேர்ந்து பெற்ற வெற்றியை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்று காட்டியுள்ளனர். தாங்கள் தனியாக வெற்றிபெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜே.வி.பி உள்ளது. அந்த அமைப்பிற்கு 70க்கு மேற்பட்;ட நாடுகளில் இருந்து ஆதரவாளர்களால் நிதி பெருமளவில் அனுப்பபடுகிறது என்று அதன் தலைவர்களில் ஒருவரான சந்திரசேகரன் தெரிவித்தார். இந்தப் பெருந்தெகைப் பணம் ஜே.வி.பியால் மக்களுக்குச் செலவிடப்படுகிறது. அதேவேளை ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தைத் தங்களது தேவைகளுக்குப் பயன்படுத்தாது மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகச் சிங்கள மக்களுக்குக் கூறிவருகின்றனர். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ராஜபக்சாக்கள் கக்கிய இனவாதத்தின் தீவிரம் போதாதென்று உணர்ந்த சிங்கள மக்கள் அதிதீவிர இனவாதத்தை நோக்கி நகர்வதையே ஜே.வி.பியை அவர்கள் அணுகுவது எடுத்துக் காட்டுகிறது.

**மகிந்த தரப்பினரின் ஊழல்களை விசாரித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவோம் என்றும் குடும்ப ஆட்சியை இல்லாது ஒழிப்போம் என்றும் அனுரகுமார திஸாநாயக்கா கூறிவருவது சிங்கள மக்களை ஓரளவுக்குத் திசை திருப்பியிருக்கிறது**

இணைக்கப்படவில்லை. அப்போதிருந்தே சிறுபான்மை இனங்கள் தொடர்பில் ரோஹண விஜயவீர கொண்டிருந்த நிலைப்பாட்டையே இது எடுத்துக் காட்டுகிறது. அதன் பின்னர் 1989ஆம் ஆண்டில் அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் 2ஆவது கிளர்ச்சியை முன்னெடுத்தனர். அப்போதைய அரசதலைவர் ரணசிங்க பிரேமதாச மிக மோசமான ஆயுத அடக்குமுறை கொண்டு அதை அடக்கினார். இந்தக் கிளர்ச்சியின்போது 60ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டனர். 1989இல் ரோஹன விஜயவீர மறைவிடம் ஒன்றிலிருந்து கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அதன்பின்னர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் உருவான ஜே.வி.பி.ஷயின் அரசியல் கட்சியில் அஞ்சான் உன்னா என்ற முஸ்லிம் பெண் ஒருவரும் சந்திர சேகரன் என்ற மொனராகலையைச் சேர்ந்த தமி ழர் ஒருவரும் சேர்க்கப்பட்டனர். இவர்கள் ஜே.வி.பி. சார்பில் நாடாளுமன்றத்துக்குச் சென்றாலும் கூடச் சிறுபான்மை இனங்கள் தொடர்பில் சாதகமான எந்த அரசியல் முன்னெடுப்புகளும் ஜே.வி.பியால் மேற்கொள்ளப்படவில்லை.

**மகிந்த தரப்பின் வெற்றி**

ஜே.வி.பியின் இனவாதப் பேச்சாளராக நீண்டகாலமாக இருந்துவந்த விமல் வீரவன்சவை மகிந்த தரப்புத் தமது பக்கமிழுத்துத் அரசியல் மேடைகளில் ஏற்றி இனவாதத்தைச் சராமாரியாகக் கக்கியதால்தான் தேர்தல்களில் பெரு வெற்றியீட்டியது. ஜே.வி.பியைவிட மகிந்த தரப்பு இனவாதத்தைச் சிங்கள இளைஞர்களுக்குக் கக்கியது. அவர்களைத் தமிழர்களுக்கு எதிராகத் திசை திருப்பிப் புலிகளைத் தமிழரிடமிருந்து பிரித்துப் பயங்கலரவாதிகள் எனவும் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டமாகவும் காட்டியது. 2009இல் போரை வெற்றிகண்டு அடுத்த கட்டத்தில் பொது ஜன பெரமுன என்ற புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துக் குறுகிய காலத்தில் அதை இலங்கையின் 3ஆவது பெரிய கட்சியாக நிலைநிறுத்தியது.

**4ஆவது பெரிய கட்சி...?**

# வள்ளுவர் வந்திறங்கியபோது திருநீறு இருக்கவில்லை...!

நாகராசா

அரசியல் தலைவர்களுக்கும் கடவுளர்களுக்கும் கனவான்களுக்கும் சிலை திறப்பதும் அதை வைத்து வாதப்பிரதிவாதங்கள் நிகழத்துவதும், ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் அதிகம் அலட்டிக்கொள்வதும் அண்மைக்காலத்தில் பிரபலமாக இருக்கிறது. இது ஓர் அரசியல் விடயமாக சிலை அரசியலாகவும் ஆகிவிட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு யாரும் சிலை எழுப்பத் துணிய மாட்டார்கள். ஏனெனில் இலங்கை அரசு அவரை இப்போதுவரை பயங்கரவாதி என்றே சொல்கிறது. அதைச் சட்டரீதியாக இல்லாமல் செய்து அரசியல்வாதிகள் அவருக்குச் சிலை வைக்கப்போவதில்லை. அவரது சிலையை அரசியலாக்க விரும்பாது இலங்கை அரசுடன் ஒத்து ஓடி அரசியல் செய்வதே இதில் அடங்கியிருக்கிறது. இப்போது யாழ்ப்பாணத்தில் நெற்றியிலும் உடலிலும் திருநீற்றுக் குறிகளுடன் திருவள்ளுவர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அது பற்றிப் பல வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. அந்தச் சிலை பெட்டி ஒன்றுக்குள் வைத்து அவ்விடத்துக்குக் கொண்டு வரப்பட்டுப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தபோது திருநீற்றுக் குறிகள் இருக்கவில்லை. பின்னர்தான் அதற்குத் திருநீறு பூசப்பட்டுள்ளது.

**திருவள்ளுவரின் திருநீற்றுச் சிலை**

திருவள்ளுவரைப் பறையர் குலத்தவர் எனவும் நெசவாளர் சமூகத்தவர் என்றும் இந்திய ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடுகின்றனர். அவர் எந்த மதத்தையும் சார்ந்தவர் அல்ல என வேறு சிலர் வரையறுக்கின்றனர். சங்க காலத்தின் சமூக ஒழுக்கச் சீர்கேடுகளை ஒழுங்கு செய்வதற்காக சங்கம் மருவிய காலப்பகுதியில் வாழ்ந்த திருவள்ளுவர் அறக்கருத்துக்களைப் போதித்தார். ஆனால், அவர் மதம் சார்ந்து எதையும் எழுதினார் என்றோ தமிழ் என்ற சொல்லை எங்கும் பயன்படுத்தி





யதாகவோ தெரியவில்லை. இதைவிட திருக்குறளில் திருநீறு பற்றியோ திரு நீற்றை எந்த வேளைகளில் பூசிக் கொள்ள வேண்டும் என்பது பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை.

இந்தச் சிலை திறக்கப் பட்டபோது உரையாற்றிய ஆறு திருமுருகன் பேசும் போது, நான் திருவள்ளுவர் சிலைகளைப் பார்க்கும் போது அமாவாசை நெற்றி களையே கண்டிருக்கிறேன். ஆனால், இந்தத் திருவள்ளு வருக்குத் திருநீறு பூசப் பட்டு வெளிப்பாக இருப் பதைக் காண்கிறேன் - என்றார். அவர் கூடத் திரு வள்ளுவர் சிலைகளுக்குத் திருநீறு வைக்கும் பழக்கம் இல்லை என்றே சொல்கி றார்.

### விக்னேஸ்வரன் - மணிவன்னண் அரசியல்

இந்து சமயம் தழுவிய உயர் குலத்து அரசியலை விக்னேஸ்வரன் முன்நிறுத்தி வருகிறார். சில நாள்களுக்கு முன்னர் கோம்பயன் மணல் சுடுகாட்டுக்கு அருகில் விபுலானந்தருக்குச் சிலை திறக்கப்பட்;டது. அதுவும் மணிவன்னண் தரப்பினாலேயே திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலைகள் சமயம் என்பதற்கும் தமிழ் மொழி என் பதற்கும் அப்பால் அரசியல் சார்ந்ததாகவே காணப்படு கிறது. இந்தியாவின் பாரதீஜ ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவராக இருக்கும் அண்ணாமலையின் வருகைக்குப் பின்னரே இவை பரவலாக நடக்கின்றன என்று பலர் ஊகம் வெளியிடுகின்றனர்.

இதைவிட ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முன்னாள் தலைவர் பத்ம நாபாவுக்கு வவுனியாவில் ஒரு சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் அரசியலாக்கப்பட்டுப் பிடுங்குப்பாடுகள் நிறைந்ததாக மாறியிருக்கிறது.

### இலங்கையின் சிலைகள்

சிலை வணக்கத்தைக் கௌதம புத்தர் எதிர்த்தார். பல இடங்க ளுக்கு நடந்து சென்று போதனை செய்ததால் அவரது பாதங்களை வைத்து வணங்கும் வழக்கம் உரு வானது. புத்தரின் உருவம்கூடத் தற்போதுள்ள புத்தர் சிலைகள் காட்டும் உண்மை உருவமல்ல. வசீகரமும், அழகும், நேர்த்தியும் மிக்க மிகைப்படுத்தலையே

**சிலை வணக்கத்தைப் புத்தர் விரும்பாத போதிலும் இலங்கையில் புத்தருக்கே சிலை வைத்து வணங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.**

தற்போதுள்ள புத்தர் சிலைகள் காட்டுகின்றன. சிலை வணக்கத்தைப் புத்தர் விரும்பாத போதிலும் இலங்கையில் புத்தருக்கே சிலை வைத்து வணங்கும் நிலை ஏற்பட்டி ருக்கிறது. அரசதலைவராக ரணசிங்க பிரேமதாச இருந்தபோது தான் உயிருடன் இருக்கும்போதே தனக்குச்சிலை ஒன்றை கல்சப் (கொழும்பு - நீதிமன்றத் தொகுதியில்) திறந்து வைத்த புதினமும் நடந்தது. தற்போது அரசியலிலுள்ள தமிழர் தாமே தமக்குச் சிலை வைக்கும் நிலையைக் கொண்டுவந்தாலும் ஆச்சரியப்ப டுவதற்கில்லை. ஏன் எனில் அவர்கள் இறந்தபின் மக்கள் அவர்களுக்குச் சிலை வைக்கமாட்டார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

### தர்மலிங்கத்துக்குச் சிலை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத் துக்கு (சித்தார்த்தனின் தந்தை) வலி தெற்குப் பிரதேச சபை வளாகத்தில் முழு உருவச் சிலை எழுப் பப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலையில் சித்தார்த் தனது புளொட் அரசியலும் தர்மலிங்கத்தின் மேட்டுக் குடி அரசியலும் கலந்திருக் கின்றன. தர்மலிங்கத்தின் முக்கியத்துவத்தை வைத் துத் தனது எதிர்கால அரசி யலை முன்னெடுத்துச் செல்வதே அந்தச் சிறை நிறுவியதன் நோக்கமாக உள்ளது.



### சம்பந்தனுக்கு சிலை

கூட்டமைப்பின் தலைவர் சம்பந் தன் அரசியலில் கோலோச்சியவர். சிறு வயதிலிருந்தே 3இனங்களுடனும் இணக்கப்பாட்டுடன் வாழ்பவர் என்பதாலும் பிரிக்கப்படாத இலங் கைக்குள் நின்று தமிழ் மக்களுக்கான தீர்வைக் காண முயன்றவர் என் பதாலும் இலங்கையைப் பிரித்து விடாதபடி பாதுகாத்தவர் என்பதற் காகவும் அவரைப் பாராட்டிப் புகழ்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் சிங்களத் தலைவர்களாலேயே அவருக்குச் சிலை வைக்க அதிக வாய்ப்புகள் உண்டு, அவ்வறான ஒரு முன்னெடுப்பை மகிந்தவோ, ரணிலோ, சந்திரிகாவோ, அனுரகு மார திசாநாயக்கவோ ஏன் விமல் வீரவன்சவோகூட எதிர்க்கப்போவ தில்லை. சிங்கள அரசியல் என்பது உயிருடன் வாழும் தலைவர்களி டத்தில் ஒற்றுமையில்லாது விட் டாலும் இறந்தவர்களுக்குச் சிலை

வைத்துப் பெருமைப்படும் நிலை இங்கு வியாபித்துள்ளது.

அண்மையில் ஆனையிறவில் நடராசர் சிலை வைக்கப்பட்டதற்குக் காரணம் சொல்லும் விதத்தில் கதை விட்டிருக்கிறார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா. அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டபோது தன்னைக் கைது செய்த காவல்துறையினர் கடுமையாகத் தாக்கியபின்னர் தான் இறந்துவிட்டதாக நினைத்து ஆனையிறவில் தூக்கி எறிந்து விட்டுப்போனார்கள் என்றும் அந்த இடத்தில் தான் தற்போது நடராசர் சிலை வைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார். அவர் கூறுவதை ஏற்றுக்கொண்டால், ஆயிரக் கணக்கில் போராளிகள் வீரச்சாவடைந்த இடங்களைக் கண்டுபிடித்து ஒவ்வெரு பிரதேச சபைகளும் பதிவுகள் செய்து எல்லா இடங்களிலும் ஆயிரக் கணக்கில் சிலைகளை எழுப்பவேண்டியிருக்கும். மாவை மயங்கிக் கிடந்த இடத்துக்கே சிலை என்றால் மண்ணுக்காக மடிந்துபோன போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் எத்தனை சிலைகள் எழுப்பப்பட வேண்டும்...?

---

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

46

## சிறப்பு அதிதிகளின் வாகன இருக்கை

அரச தலைவர், தலைமை அமைச்சர், முக்கிய அமைச்சர்கள் என அதி சிறப்பு அதிதிகள் (வி.வி.ஐ.பி. - வெறி வெறி இம்போர்ட்டன் பேர்சன்) அல்லது சிறப்பு அதிதிகள் (வி.ஐ.பி. - வெறி இம்பேரட்டன் பேர்சன்) ஆகிய தரநிலையில் உள்ளவர்களை வாகனங்களில் ஏற்றிச் செல்லும்போது அவர்களது பாதுகாப்பில் மிகக் கவனம் எடுக்கப்படும். இதனால் வாகனத்தின் எந்தப் பகுதியில், எந்த ஆசனத்தில் அவரை அமர வைத்துக் கொண்டு செல்வது என்பதில் மிக அக்கறை செலுத்தப்படும். சிறப்பு அதிதி ஒருவரை வாகனம் ஒன்றில் அமர வைத்துக் கொண்டுசெல்லும்போது பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. அதன்படி தான் அந்த அதிதி அமர வைக்கப்படுகிறார், பாதுகாக்கப்படுகிறார். அவர் வாகனத்தில் எந்தப் பாகத்தில் அமர வைக்கப்படுகிறார்...? அதை எப்படித் தீர்மானிக்கிறார்கள்...? ஏன் அப்படி அந்த இடம் தெரிவு செய்யப்படுகிறது...?

**அதிதி ஒருவரை அமர வைக்கும்** இடமாக வாகனத்தைச் செலுத்திச் செல்லும் சாரதிக்குப் பின்புறம் நேரேயிருக்கும் இருக்கை தெரிவு செய்யப்படுவதில்லை. அதே வேளை சாரதிக்கு அருகிலுள்ள முன் இருக்கையிலும் அமர வைப்பதில்லை. அதில் ஆயுதம் தாங்கிய மெய்ப் பாதுகாவலர் அமர்ந்திருப்பார். அந்தப் பாதுகாவலருக்கு நேராகப் பின்னால் இருக்கும் ஆசனத்திலேயே முக்கிய அதிதி இருத்தப்படுவார். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. வாகனத்தின் முன்னால் நின்று அதிதியைக் குறிவைத்துச் துப்பாக்கிச் சூடு நடத்தினால் அது மெய்ப்பாதுகாவலர் மீதே படும். அல்லது மெய்ப்பாதுகாவலர், ஆசனங்கள் தடையாக இருக்கும்.

இவ்வாறில்லாமல் வாகனம் விபத்துக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் சாரதி அமர்ந்திருக்கும் பகுதியும், சாரதிக்கு அருகிலிருக்கும் ஆசனமும் சாரதிக்கு நேராகப் பின்னால் இருக்கும் ஆசனமுமே அதிக பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளாக இருக்கும். இதனாலே விசேட அல்லது சிறப்பு அதிதிகளை வாகனத்தின் இடது பக்கப் பின் ஆசனத்தில் இருத்தி அழைத்துச் செல்லும் வழமை இருந்து வருகிறது. இந்த ஏற்பாட்டின் பிரகாரம் பல விசேட அதிதிகளின் உயிர் பல சந்தர்ப்பங்களில் காப்பாற்றப்பட்டிருப்பதால் இந்த முறையே பல சந்தர்ப்பங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.


# நீதிமன்றம் தீர்ப்பளித்தது...!

சிறைக்குள்...

101

மட்டக்களப்பு நீதிமன்றில் என்மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குக்கு **12.06.2002**அன்று திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் எனக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மேல் நீதிமன்றங்கள் ஒரே நீதிபதியின் கீழும் ஒரே அரச தரப்புச் சட்டத்தரணியின் கீPழும் ஒன்றுவிட்ட ஒரு மாதத்தில் கூட்டப்படுவதே அப் போது வழமையாக இருந்தது. எனது வழக்கு முடிவுறுத்தப்படும் நிலையில் இருந்ததால் மட்டக்களப்பு நீPதிமன்றில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குக்கான தீர்ப்பு திருகோணமலை நீதிமன்றில் வைத்தே வாசிக்கப்பட்டது. நீதிபதி விஸ்வநாதன் அவர்கள் தீர்ப்பை வாசித்தார். தீர்ப்பு வாசிக்கப்படும்போது குற்றம்சாட்டப்பட்டவர் நீதிமன்றக்கூண்டுக்குள் எழுந்து நிற்க வேண்டும் என்பது நியதி. நான் எழுந்து நின்று நீதிபதி வாசிப் பதை மிக உன்னிப்பாகக் கேட்டேன். அதற்காக எனது புலன் முழுதையும் பயன்படுத்தினேன். நீதிபதியின் குரல் மெல்லியதாக இருந்ததால் சில சந்தர்ப்பங்களில் அவர் வாசித்தது தெளிவாகக் கேட்கவில்லை. சில பந்திகளில் அவர் நிறுத்தி மீண்டும் தொடங்கியபோது உடலெல்லாம் பதறியது. அவர் அப்போது வாசித்துக்கொண்டிருப்பது எனது தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் அறிக்கையை. பத்துக்கு மேற்பட்ட பக்கங்களை வாசித்து முடித்து இறுதியாக, 'விடுதலை செய்யப்பட் டுள்ளீர்' என்றார். அந்தச் சொல்லைக் கேட்கும்வரை நிம்மதியிருக்கவில்லை. அந்த வார்த்தையைக் கேட்டதும் அங்கு நடப்பது உண்மைதானா என்று நிச்சயப்படுத்த வேண்டியிருந்தது. நான் உயிருடன் இருப்பதை நீதிமன்றக் கூட்டுக்குள் நின்றபடி உறுதிப்படுத்திக்கொண்டேன். அதிக சந்தோசத்தால் உடல் முழுதும் இனம் புரியாத ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. தட்டுத் தடுமாறி நீதிமன்றக் கூட்டிலிருந்து இறங்கினேன். உடம்பு சருகாக ஆகிவிட்;டதை உணர்ந்தேன். எச்சிலைக்கூட விழுங்க முடியவில்லை. கொழும்பு நீதிமன்றில் என்மீது இன்னும் சில வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்ததால் அன்றே விடுதலையாகி வெளியில் செல்ல முடியவில்லை. அன்று திருகோணமலைச் சிறையில் அடைக்

**தர்மராசா**



# 'இப்படி ஒரு பயிற்சி படையினருக்கே வழங்கப்படவில்லை'



மொழியாக்கம்
கமலநாதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

காட்டுக்குள் 3கிலோ மீற்றர்கள் வரை சென்றபின் உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. கடும் புதர்கள் வளர்ந்திருந்தன. புதர்களுக்குள்ளால் உற்றுப் பார்த்தேன். 75தொடக்கம் 100 மீற்றர்கள் வரையான தூரத்தையே பார்க்கக்கூடியதாக இருந்தது. அப்படியே காட்டுக்குள் உற்றுப் பார்த்தவண்ணமிருந்தேன். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது தொடர்பு சாதனங்களை நிறுத்திவிடுவதுடன் அவற்றை உதிரிகளாகக் கழற்றியும் வைத்துவிடுவோம். தேவை ஏற்படும்போது மட் டும் அவற்றைப் பொருத்திக் கதைத்துவிட்டு மீண்டும் கழற்றி வைப்போம்.

காட்டுக்குள் இருக்கும்போது ஒரு சந்தர்ப்பத்தில் ரி-56 ரக துப்பாக்கியின் வெடிச்சத்தம் கேட்டது. உடனடியாக நாங்கள் 6பேரும் இருவர் இருவராக மரங்களுக்குள் மறைந்து நிலையெடுத்துக்கொண்டோம். எதிர்ப்பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதை ஊகிக்க முடியவில்லை. நாங்கள் எப்போது வேண்டுமானாலும் சுடுவதற்குத் தயாராக இருந்தோம்.

நாம் பார்த்துக்கொண்டிருந்த திசையில் மனித நடமாட்டம் தெரிந்தது. அவர்கள் தமது பாதத்தை நிலத்தில் வைத்து நடந்தால் சருகுச் சத்தம் கேட்டுவிடும் என்பதால் விரல் நுனிகளை நிலத்தில் வைத்துச் சத்தம் கேட்காதபடி நுட்பமாக நடப்பதை அவதானித்தேன். அப்படி ஒரு பயிற்சி படையினருக்கு வழங்கப்படவில்லை. என்னுடன் இருந்தவர்களுக்குச் சைகை மூலம் நான் சுடும் வரை மற்றவர்கள் சுடக்கூடாது என்று பணித்தேன். நான் துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாராக வைத்திருந்தேன். அப்போது பகல் 12.30மணியிருக்கும். நான் சுடத் தொடங்கியதும் என்னுடன் இருந்த 5பேரும் அதே திசையில் சுட்டார்கள். எனக்கு மிக அருகில் நின்றவனுக்கு நெற்றியில் வெடி வைத்தேன். அங்கு வந்த புலிகள் அனைவரையும் கொன்றோம். அவர்களின் தாக்குதலில் எங்களில் 3பேர் இறந்தார்கள். நான் சுட்டுக்கொண்டிருந்தபோது எனது இடது கை சிதைந்து நெஞ்சுப் புறமாகத் தோளுக்கு மேல் தொங்கியது. புலிகள் சுட்டதில் எனது இடது கை முழங்கைக்கும் கப்பட்டேன்.

13.06.2002அன்று மீண்டும் அனுரா தபுரச் சிறைக்கு ஏற்றப்பட்டேன். அன்றுடன் திருகோணமலைச் சிறைச்சாலைக்கும் கையசைத்துவிட்டேன். திருகோணமலைச் சிறையிலிருந்து விடைபெற்றதால் இனி மேல் அறைக்குள் அடைக்கப்பட்டுக் கழிப்பறைக்குள்கூடச் செல்ல முடியாத நிலை இல்லை என்று உணர்ந்தேன். ஏதோ சிறைத் துன்பமும் அடிக்கடி எஸ்கொட் போவதும் குறைந்தது நிம்மதிதான்.

மாலை 4.30மணியளவில் அனுராதபுரம் சிறைச்சாலையைச் சென்றடைந்தேன். அங்கு அப்போது இரவுச் சாப்பாடு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் எம்மை உடனடியாக வாட்டுக்குள் அனுமதிக்க வில்லை. ஏனைய கைதிகளைப் பூட்டிய பின் மேலதிக கணக்கை எழுதிவிட்டுக் குறிப்பிட்ட வாட்டுகளில் விட்டார்கள். களுத்துறை ஏ வார்ட்டில் இருந்த சீலன் என்ற கைதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகியிருந்தபோதிலும் அவர் காவல்துறையினருடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டதால் ஏனைய அரசியல் கைதிகளுடன் அவரை அடைக்காது பொதுக் கைதிகளுடன் விடப்பட்டார். சீலன் என்பவருக்குத் திரு கோணமலையில் இரு நீதிமன்றங்களிலும் பிணை வழங்கப்பட்டிருந்தது. எனினும் பிணை எடுப்பதற்குக் குடும்பத்தவர்களோ நண்பர்களோ முன்வரவில்லை. அவரது கடந்த காலம் அவரை அந்நியப்படுத்தியிருந்தது. சிறையிலும் துக்கப்பட்டு வெளியில் போய் வாழ முடியாத சூழலும் அவருக்கு இருந்தது.

எம்முடன் திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலை மருத்துவம னைக்கு அனுப்பப்பட்ட சிங்களக் கைதி ஒருவன் திருகோணமலைப் பிரதம ஜெயிலரைத் தூஷணத்தால் பேசிக்கொண்டிருந்தான். தனக்கு வயிற்றில் கடும் வலியாக இருக்கிறது திருகோணமலை மருத்துவமனைக்கு அனுப்புங்கள் என்று அவன் கேட்டபோது ஜெயிலர், "உங்களுக்கு வைத் தியம் செய்ய அனுராதபுரம் சிறைச்சாலை இருக்கு அங்குபோய்ப் பார்த்துக் கொள் என்று சொல்லி அனுப்பினார் என்று கூறினான். திருகோணமலைச் சிறைச்சாலைப் பிரதம ஜெயிலர் காலையில் வரும்போது பெரிய பை ஒன்று கொண்டுவருவார். கைதிகளின் சாப்பாட்டுக்காகக் கொண்டு வரப்படுகின்ற பொருள்களை அதற்குள் களவெடுத்துக் கொண்டு போய்விடுவார். எத்தனையோ நாள் சாப்பாட்டுச் சாமான்களை பையுக்குள் எடுத்து வைத்ததைத் தான் கண்டதாகவும் தனக்கு ஏற்கனவே இரண்டு வழக்குகள் உண்டு அதற்கு மேலதிகமாக அவரையும் கொன்றுவிட்டுத்தான் வரவேண்டும் என்று வருத்தத்திலும் கோபத்திலும் பேசினான்.

(தொடரும்)

தோளுக்கும் இடையில் சிதைந்து தோளுக்குமேல் தொங்கிக் கொண்டிருந்தது. மற்றக் கையால் அதை எடுத்துப் பின்னால் போட்டேன். இத்தாக்குதலில் என்னுடன் மிக நெருக்கமாக இருந்த சேனவிரத்ன என்பவரும் கொல்லப்பட்டார். எங்களில் நானும் இருவரும் உயிர் தப்பியபோதும் கடுமையாகக் காயப்பட்டிருந்தோம். எங்களை அங்கிருந்து கொண்டுபோகுமாறு தொலைத்தொடர்புக் கருவியில் கூற முடியாத அளவுக்குக் காயப்பட்டிருந்தோம். நான் இறந்தவர்களுடன் இருக்கிறேன் என்று கூறிவிட்டு மற்றைய இருவரையும் மெல்ல மெல்ல இழுத்துக்கொண்டு நடந்துபோய் படையினருக்கு அறிவிக்குமாறு கூறினேன். நானும் அவர்களுடன் இணைந்து 300 மீற்றர்கள் வரை பின்வாங்கினேன். நான் எனது வலது கையில் எல். என்.பி துப்பாக்கியை இறுக்கிப் பிடித்தபடி இழுத்துச் சென்றேன்.

எனது காயப்பட்ட கையிலிருந்து குருதி கட்டி கட்டியாகக் கொட்டியது. சிறிய மாபிள்கள்போல கொட்டுவதைக் கண்டேன். மயக்கம் வருவதுபோலிருந்தது. அங்கு தண்ணீர் குடிக்க வசதியிருக்கவில்லை. எனக்கு அருகில் நின்றவரிடம் எனது முகத்தில் சிறுநீர் கழிக்குமாறு கூறினேன். அவர் தயங்கினார். கெட்ட வார்த்தையால் பேசி சிறுநீர் கழிக்க வைத்து அதைக் குடித்தேன். தலையிலும் தண்ணீர்போல சிறுநீர் கொட்டியதால் மயக்கம் அடைவதிலிருந்து தப்பினேன். எதிரியின் கையில் சிக்கக்கூடாது என்று நினைத்து 2கைக்குண்டுகளைக் கையில் வைத்திருந்தேன். வலது கையால் எறிவதற்கு எனக்குத் தென்பிருந்தது.

**காட்டுக்குள் இறக்கப்பட்டிருந்த உலங்கு வானூர்தி**

தாக்குதல் நடக்கும்போது வான் படையின் உலங்கு வானூர்தியை ஏதாவது ஓரிடத்தில் இறக்கிக் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு அவசரமாகக் கிளம்புவது வழக்கமாக இருந்தது. ஆனால் இந்தத் தாக்குதலின்போது எங்களிடமிருந்து எந்தத் தகவலும் வான் படைக்குச் செல்லவில்லை. ஆனாலும் வான்படைக் கேணல் திலகே அன்றே உலங்கு வானூர்தியைக் காட்டுக்குள் இறக்கி முதற் தடவையாக அதன் இயந்திரத்தை நிறுத்தி 45 நிமிடங்கள் வரை எமக்காகக் காத்திருந்தார். அது மறக்க முடியாதது. கேணல் திலகே மிகச் சிறந்த துணிவான சிப்பாய். களத்தில் நிற்கும் படையினரை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது.

காயப்பட்ட எங்களில் ஒருவர் மயக்கமடைந்து கிடந்திருக்கிறார். பின்னர் மழை பெய்ததால் நினைவு வந்தது. எமது பக்கமாக இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். சிறப்புப் படைப்பிரிவை எடுத்துக்கொண்டால் 100பேரில் 97பேர் போரில் காயப்பட்டவர்களாகவே இருப்பார்கள். எங்களையும் மற்றவர்களின் சடலங்களையும் மீட்டுக்கொண்டு உலங்கு வானூர்தி அனுராதபுரத்தை நோக்கிச் சென்றது.

நான் காலையில் எனது துப்பாக்கியைக் கையிலெடுக்கும்போது அதைத் தொட்டுக்கும்பிட்டுவிட்டு எடுத்தேன். எனது துப்பாக்கிக்கு முன்னால் வரும் எதிரி அழிய வேண்டும் என்றே அப்போது வேண்டிக் கொள்வேன்.

*இந்த வார சமையல்*



# சைவரிசிக் கஞ்சி (பாயாசம்)

விரத நாள்களிலும் கொண்டாட்ட தருணங்களிலும் பாயாசம் என்பது உணவோடு தவிர்க்காது இடம்பிடித்து விடுகிறது. வடை, பாயாசம் இல்லாத சபை (பந்தி) சோபையிழந்துவிடும் என்பது பாயாசத்தின் மகிமையையே உணர்த்துகிறது. கோவில்களில், திருமண மற்றும் பூப்புனிதச் சடங்குகளில், புதுமனைப் புகுவிழாக்களில் என உணவு வழங்கும் தருணங்களில் மாத்திரம்தான் பலரும் பாயாசத்தைச் சுவைக்கிறார்கள். வீடுகளில், சாதாரண நாள்களில் பாயாசம் காய்ச்சி அருந்துவோர் அரிது. இதனால் பலருக்குப் பாயாசம் தயாரிப்பது எவ்வாறு என்றுகூடத் தெரி யாதிருக்கிறது. ஆகவே இந்த வாரம் பாயாசம் காய்ச்சுவது எப்படி என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

சைவரிசி - 150 கிராம்
தேங்காய்ப்பால் - 3 டம்ளர்கள்
சீனி - 100 கிராம்
கச்சான் - கைப்பிடியளவு
கஜூ - கைப்பிடியளவு
பிளம்ஸ் - கைப்பிடியளவு
ஏலக்காய் - 3 அல்லது 4
சேமியா - 50 கிராம்
வாசனை தேவையென்றால் சேர்த்துக்கொள்ளலாம்
உப்பு - சிறிதளவு



**எப்படிக் காய்ச்சுவது...?**


முதலில் சைவரிசியைச் சட்டி ஒன்றுக்குள் போட்டு இலோசாக வறுத்துக்கொள்ள வேண்டும். கச்சான், கஜூ ஆகியவற்றையும் வறுத்தெடுக்க வேண்டும். தேங்காய் பாலையும் எடுத்து வைத்திருங்கள். பாயாசம் காய்ச்சும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் தேங்காய்ப் பாலை இட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். பால் கொதித்து வர சைவரிசியைப் போட்டுக் கிளறிக் கொண்டிருக்க வேண்டும் (கிளறாது விட்டால் இறுக்கமாகி விடும்). கையோடு சீனியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சைவரிசி அவிந்து வந்ததும் கச்சான், கஜூ, பிளம்ஸ் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். சிறிது உப்புச் சேர்த்துச் சுவையைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். சூடாக இருக்கும்போது நீர்த் தன்மை அதிகமாக இருக்கும் பாயாசம் சூடாறி வர இறுக்கமடைந்துவிடும். சிலர் இரண்டு அல்லது மூன்று துளித் தேசிப் புளி சேர்த்துக் கொள்வதும் உண்டு.

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

01




ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் **(1905-1988), 19**ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சியின்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் செல்வாக்குடன் இருந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சிலகாலம் கற்றபின்னர், கொழும்பில் புனித ஜோசப் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்திருந்தார். **1922**முதல் பத்திரிகையாளராகப் பணியாற்றினார். சிட்டிசன், யங் லங்கா, சிலோன் டெய்லி மெயில், சிலோன் மோர்னிங் லீடர், இந்து சாதனம், டெய்லி நியூஸ், த ட்ரிபியூன் என இவரது ஊடக உலகம் பரந்து விரிந்தது.

**1924**இல் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்ந்து, சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். சில காலத்திலேயே சட்டப் படிப்பைக் கைவிட்டு சேர்.பொன்னம்பலம் அருணாச்சலத்தின் பாதிப்பில் அரசியலில் ஈர்க்கப்பட்டார்.

தனிநாயகம் அடிகளாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவர் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பலவற்றினதும் முக்கிய பங்காளராக இருந்துள்ளார். யாழ்ப்பாணத் தொல்பொருள் சங்கத்தை நிறுவி அதன் முக்கிய பங்காளராக இயங்கியுள்ளார். பெருங்கற்கால யாழ்ப்பாணம் தொடர்பான அகழ்வாய்வுகள் ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் இடம்பெற்ற வேளை மிக முக்கிய பங்காற்றியிருந் தார்.

இவரது அயராத ஆய்வுப் பணிகளை மதித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு **1980**களில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி மதிப்பளித்தது.

தீவிரமான அரிய நூல் மற்றும் ஆவணச் சேகரிப்பாளரான கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் தமது துணைவியார் இவ்லின் இரத்தினம் அவர்கள் மறைந்த பின்னர் அவரது ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் ஒரு பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தை நூலக வசதியுடன் அமைத்து **10.05.1981**அன்று திறந்து வைத்தார்.

எஸ்.பி.அமரசிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1954முதல் வெளிவந்த த ட்ரிபியூன் இல் டிசம்பர் 1995 முதல் ஜனவரி 1981 வரை பல சுவாரஸ்யமான கட்டுரைகளை இவர் எழுதி வந்துள்ளார்.

இலங்கை அரசியலில் 1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் பண்டாரநாயக்க அரசினால் கொண்டு வரப்பட்ட வேளையில் 1957 ஜூலை 19 ட்ரிபியூன் இதழில் ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் house of nilaperumal என்றொரு சுவையான ஆய்வுக் கட்டுரையை எழுதியிருந்தார். அதில் பண்டாரநாயக்கவின் மூதாதையர் நீலப்பெருமாள் என்ற தமிழரே என்று நிறுவியிருந்தார். இந்தக் கட்டுரை பிரசுரமான வேளையில் ஜெ.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் நாடாளுமன்றத்தில் எஸ்.டபிள்யூ. பண்டாரநாயக்கவை சீண்டி அவமானப்படுத்தும் நோக்குடன் இக்கட்டுரையை எடுத்தாண்டு உரையாற்றியிருந்தார்.

ஜே.ஆரின் இந்த நிலைப்பாடு அவரது நண்பராயிருந்த போதிலும் ஜேம்ஸ் இரத்தினம் அவர்களுக்கு உவப்பாயிருக்கவில்லை. பண்டாரநாயக்கவைக் கேலி செய்யும் அளவுக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மூதாதையர் ஒன்றும் தூய சிங்கள வழித்தோன்றல்கள் அல்ல என்று கூறும் மற்றொரு ஆய்வுக் கட்டுரையை thambi mudaliyars legacy என்ற பெயரில் எழுதி 1957 ஓகஸ்ட் 30 ட்ரிபி யூன் இதழில் பிரசுரித்து ஜே.ஆரின் கொட்டத்தை அடக்கினார். அவரது கட்டுரையை இரசித்து ஜே.ஆர்., கலா நிதி ஜேம்ஸ் இரத்தினம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தையும் அவர் இரத்தினம் நிறுவனத்தில் பாதுகாத்து வந்தார்.

பண்டாரநாயக்க, ஜே.ஆர். பரம்பரைகளின் மூதாதையர்கள் தமிழரே என்ற உண்மையைப் போட்டுடைத்த ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் மேலும் பல சுவையான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். வட்டுக்கோட்டை செமினரி வரலாறு, கண்டி அரசியின் ஓவியம் பற்றிய சர்ச்சை, பொலநறுவை பெருஞ் சிற்பம் அரசருடையதா அகஸ்தியருடையதா என்ற விசாரணை, எல்லாளன் சமாதி பற்றிய வரலாற்று மோசடி, பெருங்கற்கால யாழ்ப்பாணம் என இப்பட்டியல் நீள்கிறது.

இந்நூலில் மேலே குறிப்பிட்ட இரு ஆங்கிலக் கட்டுரைகளும் விண்மணி அவர்களால் சுவையாகத் தமிழாக்கம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களின் படைப்பாக்கங்கள் அனைத்தும் காலக்கிரமத்தில் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும். இலங்கையில் தமிழரின் வரலாற்றின் தொன்மையை அறிந்துகொள்ள இவரது கட்டுரைகள் உதவும். பல மாயைகளை அவை உடைத்தெறியும்.

**என். செல்வராஜா**
**நூலகவியலாளர், லண்டன்**
**(குறித்த நூலின் முன்னுரை)**

கடந்த கால பரம்பரை உரிமையை நினைத்துத் தமது முன்னோர்களில் சிலரைப் பெருமையுடன் நினைவுகூரும் நமது பிரதமரின் மிக முந்திய பிதாமகன், 15ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த நீலப்பெருமாள் என்னும் தமிழராவார். (ஆர்னோல்ட் ரைட் டால் எழுதப்பட்ட "டுவென்டியத் செஞ்சரி இம்பிரஷன்ஸ் ஒப் சிலோன் - twentieth century impressions of Ceylon என்ற நூலின் 525ஆம் பக்கம்) இலங்கையின் ஆலயம் ஒன்றில் பிரதம குருவாகப் பணிபுரிவதற்காக அவர் இங்கு வருகை தந்ததாக அந்நூலிலே விவரிக்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலமாகப் பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் அதிர்ஷ்டத்தைப் பறைசாற்றி வந்த - குடும்ப ஆலயமாகக் கருதப்பட்டு வந்த நவகமுவ தேவாலயத்தை நிர்மாணித்தவரும் அதன் முதலாவது கப்புறாளையும் (பூசகர்) அவரேயாவார். கடந்த காலங்களில் - ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் - பண்டாரநாயக்கா குடும்பத்தினர் கலுகபுகே எனும் குடும்பப் பெயரைப் பயன்படுத்தினர். நீலப்பெருமாள் என்பதன் சிங்கள மொழிபெயர்ப்பே அது.

**பண்டாரநாயக்க, ஜே.ஆர். பரம்பரைகளின் மூதாதையர்கள் தமிழரே என்ற உண்மையைப் போட்டுடைத்த ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் மேலும் பல சுவையான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்**

1720ஆம் வருடம் பிறந்த தென் பிரான்ஸிஸ்கோ (பிரான்ஸ்ஸிஸ்கஸ்) டயஸ் விஜயதுங்க, ஹேவாகம் கோரளையில் முதலி ஆகப் பணி புரிந்தார்.

இந்த நாட்டில் முதலி என்ற பதவி ஏற்படுத்தப்பட்ட பின் முதன் முதலாக அந்தப் பதவி வழங்கப்பட்ட சிலரில் அவரும் ஒருவர். 1760இல் மலைநாட்டுக்கு வருகை தந்து அந்தக் காலத்தில் டச்சுக் காரர்களுடன் போர் புரிந்துகொண்டிருந்த கண்டி இராச்சியத்தின் போர் வீரர்களுடன் அவர் இணைந்தார். அதனால் நான்கு கோரளையின் முதலி பதவியை இழக்க நேரிட்டது.

பிரான்ஸிஸ்கோவின் முதலாவது திருமணத்தின் மூலம் அவருக்குப் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். அவரது மனைவியின் பெயர் தோனமரியா பெரேரா. பிள்ளைகளில் அறுவர் ஆண்கள். நால்வர் பெண்கள்.

மஹா முதலி கொன்ராட் பீட்டர் டயஸ் பண்டாரநாயக (சீனியர்) அவர்களின் நான்காவது புத்திரனாவார். அதே பெயரில் அவருடைய பேரன் ஒருவர், பிற்காலத்தில் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் மஹா முதலி பட்டத்தைப் பெற்றார். பிரான்ஸிஸ்கோவின் ஐந்தாவது புத்திரன் சியனே கோரளையின் டேனியல் பண்டாரநாயக்க ஆவார். 1748 பெப்ரவரி 14ஆம் திகதி அவர் ஞானஸ்நானம் பெற்றார். 1773 ஜனவரி 13ஆம் திகதி திருமணம் புரிந்தார். சியனே கோரளையில் மஹா முதலியாகப் பணி புரிந்த தொன் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவின் தகப்பனார் இவரே.

சுசானா ஸ்க்ரோப்பின் பேர்த்தியை தென் சொலமான் திருமணம் புரிந்தார். கொழும்பு கோட்டையில் (தற்போது கோல்டன் பூங்கா வளவில் அடங்கிய) டச்சுத் தேவாலயத்துக்கு உரித்தான மயானத்தில் (முன்னர் கத்தோலிக்க

# கடன்பட்டாலும் கலங்காத இலங்கை வேந்தன்

தர்மி

கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்றொரு சொற்றொடர் கம்பராமாயணத்தில் வருகிற ஒரு வர்ணணையில் உண்டு. அந்தக்காலத்து இலங்கை வேந்தனான இராவணன் கலங்கியதுபோல பன்னாட்டு நாணய நிதியத்திடம் கடன்பட்டிருக்கிற இன்றைய இலங்கை வேந்தனான ரணில் விக்கிரமசிங்க தான் பெற்ற கடனை நினைத்துக் கலங்குகிறாரா...? என்றால் அதுதான் இல்லை. தனது ஆட்சியை நீடிப்பதற்காகவும் அதேநேரம் தற்போதுள்ள உள்நாட்டுப் பொருளாதாரச் சூழலைச் சமாளிப்பதற்காகவும் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடன் வாங்கியது மட்டுமல்லாது கடன் கிடைத்துவிட்டது என்று சந்தோசப்படுகிற நிலையும் ஏற்பட்டுள்ளது.

உள்ளூரில் ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால், தமது உழைப்பு இல்லாமல்போய் வருமானம் இழந்த பின்னர் கைவசமிருக்கின்ற சேமிப்புகளையும் பொருள்களையும் வைத்து வாழ்க்கையைக் கொண்டிழுக்கும. அல்லது ஏதோ ஒருவாறு சமாளித்துவிட்டு அதன் பின்னரே கடன்வாங்கும் நிலை பற்றி யோசிக்கும். ஆனாலும் பொதுவாகக் கடன் படுவதை விரும்புவதில்லை. அதை எப்படித் திருப்பிச் செலுத்துவது அல்லது ஈடு வைத்த பொருளை எப்படி மீட்பது எனத் தூர நோக்காகச் சிந்திப்பதே அதற்குக் காரணம். கடன் சுமையிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதே முக்கிய பிரச்சினையாக இருக்கும். குடும்பமே இப்படியிருக்கையில் நாட்டு மக்களின் தலையில் பெருங்கடனைச் சுமத்திப் பாரத்தை அதிகப்படுத்தியிருக்கிறார் ரணில். அது தனது கடனில்லை என்ற அளவுக்கு அவர் திருப்திப்பட்டுக்கொள்ள அது அவர் பட்ட கடன் என்ற நினைப்புடன் மக்கள் திருப்திப் பட்டுக் கொண்டுள்ளனர்.

**ஜெ.ஆரைப் போல ரணில்**

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜெ.ஆர் தோற்ற பின்னர் மறுபடியும் வெல்வதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பின்னரே 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வெல்ல முடிந்தது. அந்த 7 ஆண்டுகளில் அவர் சிங்களக் கிராமங்கள் தோறும் வைத்த பொக்கற் மீற்றிங் எனப்படுகிற சிறு குழுக்களாக மக்களைச் சந்தித்துக் கூட்டங்களை நடத்தினார். சிறிமாவின் உள்நாட்டு உற்பத்தி தமிழருக்கு அதிக



போர்த்துக்கேயர் தேவாலயம்) 1781 ஜூன் மாதம் 15ஆம் திகதி இவர் அடக்கம் செய்யப்பட்டார். இப்போது அந்த நினைவுப் பலகை கொழும்பு ஆட்டுப் பட்டித் தெருவிலுள்ள டச்சுத் தேவாலய பூமியிலேயே உள்ளது. ஸ்க்ரோப் பரம்பரையின் இரதல வம்சத்தின் குடும்ப இலச்சினை இந்த நினைவுக்கல்லிலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இடது பக்க கஸ்தானதாரி என அதில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது இரதல பண்டாரநாயக்க குடும்பத்தின் ஒரு பகுதியாகும்.

சுசானா ஸ்க்ரோப், டச்சு ஆட்சியின்போது கிழக்கிந்திய நிறுவனத்தில் பணி புரிந்த லெப்டினன்ட் ஜென் கிரிஸ்டோ போல் ஸ்க்ரோப்பின் புதல்வியாவார். ஸ்க்ரோப் பரம்பரை குறித்து டச்சு பேர்கர் யூனியன் சஞ்சிகையின் எட்டாவது தொகுப்பின் ஆறாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜே.சி.ஸ்க்ரோப் ஜெர்மனியில் சென்கவுசன் மாகாணத்தின் வடக்கு சென்சோனி மாகாணத்திலிருந்து வந்தவர். 1734 ஆம் வருடம் எலிஸபெத் சேரம் எனும் பெண்மணியைக் கொழும்பில் திருமணம் முடித்தார்.

1743ஆம் வருடம் ஞானஸ்நானம் பெற்ற சுசானா 1759இல் திருமணம் முடித்தார். அவ்விவாகம் நவம்பர் 4ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. அவர் திருமணம் முடித்தது, டச்சுச் சபையைச் சேர்ந்த சிங்களப் பாதிரியார் ஒருவரையே ஆகும். 1733-1790 காலப் பகுதியில் வாழ்ந்த மத போதகரான வண.ஹென்ரிக்கஸ் பிலிப்ஸே அவராவார்.

அவர் பற்றிய தகவல்கள் டச்சுக் கிழக்கிந்திய சபையின் மதகுருமார் பற்றிய வரலாற்றிலே இடம்பெற்றுள்ளது.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்மையளிக்குமே தவிர சிங்கள மக்களுக்கு அல்ல என்றார். உணவுப் பொருள்களுக்கு மக்கள் படும் கஸ்ரங்களும், பாணுக்காக வரிசையில் நிற்கும் நிலையும் மாற வேண்டுமானால் திறந்த பொருளாதாரக் கொள்கை அவசியம் என்று சிங்களக் கிராமத்தவர்களுக்கு விளக்கினார். இதனாலேயே 1977 தேர்தலில் பெரு வெற்றியடைந்தார்.

அதேபொன்றதொரு பொருளாதார நெருக்கடியான சூழல் கடந்த இரு வருடங்களாக இலங்கையில் நிலவி வருகிறது. மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் நிலையும் ஏற்பட்டது. பொருள்களுக்குத் தட்டுப்பாடு, 4 மடங்கு விலை உயர்வு, எரிபொருள், எரிவாயு, பால்மா, மின்சாரப் பிரச்சினை எனப் பல்வேறு விடயங்களுக்கு மக்கள் முகம் கொடுத்ததும் அப்போதைய அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டுக் கலைக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் பலம் இல்லாதபோதும் அந்த நெருக்கடியான சூழல் அவருக்குக் கைமேல் பலனைக் கொடுத்தது. அதை வைத்தே அரசதலையாகப் பதவியேற்று அதை எவ்வாறு தக்க வைப்பது என்ற நிலை பற்றியும் யோசிக்கத் தொடங்கினார். மூளையே இதற்கு முதலீடாக இருந்தது.

**நாடாளுமன்றத்தை நீடிப்பது**

ரணில் விக்கிரமசிங்கவினால் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து கடன் பணத்தை ஒருபோதும் பெற முடியாது என்றும் அது ஒரு கனவு என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் உட்பட சகல எதிர்க்கட்சிகளும் அறிக்கைவிட்டன. நாடாளுமன்றில் காரசாரமான விவாதத்தையும் நடத்தினர். ஆனால் அவை எல்லாவற்றையும் மேவி பன்னாட்டு நாணய நிதியத்தின் கடனைப் பெற்றதுடன் இப்பணத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்த முடியாது என்ற முன் நிபந்தனையையும் பன்னாட்டு நாணய நிதிய அதிகாரிகளிடமிருந்து பெற்றார் ரணில். இந்தச் சூழலில் தேர்தல் ஒன்றை வைக்கும் நிலையில் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க இல்லை. தற்போதுள்ள நாடாளுமன்றத்தை மேலும் நீடிப்பதற்கான முன்மொழிவுகளை அவர் வெயியிட்டால் அதை எதிர்த்து ஏனைய உறுப்பினர்கள் எவரும் பேசப்போவதில்லை. வரவிருக்கும் தேர்தலில் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களை மக்கள் தெரிவு செய்ய மாட்டார்கள் என்பது அவர்களுக்கே நன்கு தெரியும்.

**டொலர்களை மாற்றிய மக்கள்**

பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு வழங்கப்பட்டு விட்டது என்ற செய்தி கிடைத்ததும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மக்கள் தமது கையில் வைத்திருந்த அமெரிக்க டொலர்களை வேகமாக ஓடியோடி மாற்றியிருக்கிறார்கள். எதிர்வரும் நாள்களில் டொலரின் உள்நாட்டுப் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சியடையும் என்ற எதிர்பார்ப்பே அதற்குக் காரணமாகும்.

**முதலீட்டாளர்களுக்குப் பாதிப்பு**

இலத்திரணியல் மற்றும் கைபேசி, கணனிப் பொருள்கள் சடுதியாக விலை குறைந்து வருவதால் அதிக விலை கொடுத்து அவற்றைக் கொள்வனவு செய்த முதலீட்டாளர்கள் பெருமளவு நட்டமடைந்துள்ளனர். சொத்துக்களை அதிக விலைக்கு விற்க எதிர்பார்த்திருந்த பலர் தாம் எதிர்பார்த்ததில் அரைவாசிப் பெறுமதிக்குக் கூட அதை யாரும் வாங்க முன்வராத நிலையில் திண்டாடுகின்றனர். கையில் பணம் வைத்திருப்பவர்கள் நாணயப் பெறுமதியைக் கருத்தில் எடுத்துத் தமது புதிய முதலீடுகளை மேற்கொள்ள முனைகிறார்கள். இதனால் இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரச் சூழல் ஓரிரு நாள்களிலேயே மிகப் பெரிய மாற்றத்துக்கு உட்பட்டிருக்கிறது.

**சொத்துக்களை அதிக விலைக்கு விற்க எதிர்பார்த்திருந்த பலர் தாம் எதிர்பார்த்ததில் அரைவாசிப் பெறுமதிக்குக் கூட அதை யாரும் வாங்க முன்வராத நிலையில் திண்டாடுகின்றனர்.**



கடன் பெற்று நாட்டை வழிநடத்தும் நிலையில் இலங்கை இருக்கிற போது, எதிர்காலத்தில் பெரிய கடன்பொறிக்குள் சிக்கவிருக்கிறோம் என்று தெரிந்தும் கடன் கிடைத்தைக் கொண்டாடும் நிலையிலேயே ஆட்சியாளர்களும் மக்களும் உள்ளனர். இதைவிட இலங்கையில் 80வீதமானவர்கள் சிங்கள மக்களாக இருப்பதால் கடன் சுமையின் தாக்கம் அவர்களின் தலையிலேயே அதிக அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதும் உண்மைதான்.



# சவடால் வீரன்களெண்டது இதுகளையோ?

கதிரேசன் காத்தவராயன்

நேற்றைக்கதிலை வாசிசாலையடிக்குப் போனன். அங்கை முருகேசரும் கனகரும் இருந்தினம். பேப்பரை விரிச்சுப் பிடிச்சபடி கதைச்சுக்கொண்டிருந்தினம். என்னைக் கண்டிட்டு 'வாப்பா கதிரேசண்ணை...கனகாலத்துக்குப் பிறகு...' எண்டு முருகேசர் தொடங்க 'ஐ.எம்,எவ் பேச்சுக்குப் போனதாச் சொன்னாங்கள்?' எண்டுகனகர் சிரிக்காமல் சொல்லநாங்கள் ரண்டு பேரும் சிரிச்சம்.

' உண்ணானையண்ணை? உன்ரை புண்ணியத்திலை இப்ப நெருக்கடியள் குறையும் போலை?'எண்டு ஒரு சிரிப்போடை முருகேசர் சொல்ல 'எடப்பா... வாணம் விடுறதெண்டு முடிவாச்சுது... காணியை வித்தெண்டாலென்ன கடனைப்பட்டெண்டாலென்ன விடத்தானே வேணுங்கண்டியோ?' எண்டு சொன்னன். 'உண்மைதான்... கிடக்கிறகடனுக்கென்ன அதுக்கான வட்டிக்கென்ன எண்டுறதைவிட புதிசாக் கடன் கிடச்சதுக்கல்லே வெடி சுடுறாங்கள்...' எண்டார் எரிச்சலோடை கனகர்.

அந்த நேரம் வல்லியம்மானும் தம்பரும் எதிரெதிர்ப் பக்கங்களாலை வந்து இருந்துகொண்டினம். என்ன அம்மான்? சாமானுகள் மலியுதாம்?' எண்டு கனகர் கேட்டதுக்கு எட்டி வெளியாலை எச்சிலைத் துப்பிப்போட்டு ஒரு சிரிப்புச் சிரிச்ச வல்லியம்மான் 'ம்ம்ம்..ம்ம்... இருந்துபார் எத்தினை நாளைக்கெண்டு? உந்தக் கதையளை நம்புறியோ?' எண்டார்.

'ஏனம்மான் நாட்டுக்குக் காசு கிடைச்சிருக்கல்லே? இனியினி குறையுந்தானே?' எண்டு வாயைக் குடுத்தார் தம்பர். 'எடேய்....(தணிக்கைச் சொற்கள்) கடனுக்கு வட்டியே கட்டேலாதவன் புதுசாக் கடன்வாங்கி என்னத்தைப் பண்ணப்போறான்? சரி விடு அப்பிடி வாங்கினதைக் கொண்டு ஏதாலும் உழைக்கிற வழியைப் பாக்கிறாங்களோ? சோக்குப்பண்ணிப்போட்டுப் பாரன் தம்பு இதைவிடக் கேவலப்படப்போறம்...' எண்டு சீறினார் வல்லியம்மான்.

'உண்மைதானம்மான்'எண்டார் கனகர். அப்ப சுதனும் கூட்டாளியொருதனுமாய் வந்து இருந்துகொண்டு ஒரு சிரிப்போடை ' சமா வலு சீரியசாயப்போகுதுபோலை?: எண்டு கேட்டான் சுதன். 'எட..எங்கடை வாத்தியாற்றை பெடியே? இப்ப எதடா சீரியசில்லாமல் கிடக்குது? ஏதாலுமொண்டு சொல்லு பாப்பம்?' எண்டார் உற்சாகமாய் வல்லியம்மான்.

'அதுகுஞ்சரிதான்' எண்டு முருகேசர் சொல்ல 'அதுகும்சரிதானில்லை..அதுதான்சரி' எண்டு திருத்தின வல்லியம்மான் 'எடேய் தம்பி...நீ படிச்ச படிப்பை வைச்சுச் சொல்லுபாப்பம்... நாட்டிலை இன்னும் ஈடுவைக்க விக்கவெண்டு ஏதாலும் மிச்சமிருக்கோ?' எண்டு கேட்டார். 'ஆக்கள்தான் மிச்சம்' எண்டு சுதன் சொல்ல 'ஆக்களையும் வித்தாச்சோ இல்லையோ எண்டுதெரியாதல்லே?'எண்ட கூட்டாளிப்பெடி எல்லாரையும் ஒரு பரிதாபப் பார்வை பாத்தான்.

'உண்மைதான்... ஆர் கண்டது? வாங்கினவன் வந்து வா எண்டால் போறதுக்கு றெடியாயிருங்கொ அம்மான்' எண்டு கனகர் சொல்ல எல்லாருமாச் சிரிச்சம். 'சிரிக்கிறம்... அப்பிடி நடந்தாலும் ஆச்சரியப்பட ஒண்டமில்லை' எண்டார் முருகேசர். தம்பர் வல்லியம்மானை ஒருவிதமான கவலையோடை பாத்ததைக்கண்ட நான் கனகரக்குக் கண்காட்டினதை வல்லியம்மான் பாத்திட்டு சிரிச்சபடி 'தம்பா..அப்பிடிப் போறதெண்டால் உன்னையும் சொல்;லிக் கூட்டிக்கொண்டு போறன் கவலைப்படாதை' எண்டதுக்கு எல்லாருமாச் சிரிச்சம்.

'அதுசரியடாப்பா சுதன்... உந்த உங்கடை ஆசிரியர் சங்கம் சம்பளத்துக்கு வரி போட்டாச் செண்டு அண்டைக்கு ஸ்ரைக் பண்ணினதல்லே... உங்கடை சம்பளம் கூடயில்லை எண்டதுக்கு ஏன் ஒரு சத்தப்பொறுதியையும் காணெல்லை?' எண்டு கேட்டார் முருகேசர். 'அது அவை

டொக்ரர்மார் பெரிய பதவிக்காறர் தானே வரியிலை அகப்பட்டாக்கள்? அதுக்கேன் அப்ப நீங்கள் சத்தம் போட்டனீங்கள்?' எண்டு நான் கேட்டன்.

'அது மாமா... இப்ப அப்பிடித் தான் ஆகிப்பொச்சுது போலைதான் கிடக்குது... எங்கடை சம்பளத் தின்ரை அடுத்த கட்டத்தைக் கூட்ட வேணும் அல்லது இருவதாயிரமாவது கூட்டவேணும் எண்டதான் தொடங் கினது... என்ன டீலோ தெரியாது? அப்பிடியே பேச்சோடை சரி... நாங்கள் எப்பவும் றோட்டிலைதான்' எண்டான் சுதன். எரிச்சலோ ஏமாத் தமோ ஏதோவொண்டுஅவன்ரை குரலிலை இருந்துது.

'எல்லாம் வாய்ச்சவடால்தான்... என்ன?' எண்டுகொண்டு எழும் பினன் வல்லியம்மான் 'கதிரேசு நில் நானும் வாறன்' எண்டு வர ரண்டு பேருமாய் நடையைக்கட்டினம்.

---

# ஓட்டம்...

03

துன்பானந்த சுவாமி



உணவுப்பொருட் பாவனை அதாவது நுகர்வு மாற்றமென்பதற்கு காலத்தோடு பொருத்திக் காரணங்களை முன்வைக்கிறோம். இப்போதைய சூழலுக்கு பழைய எமது முறைகள் பொருத்தமா? என்பது பொதுவானதும் பரவலானதுமான கேள்வி யாக முன்வைக்கப்படுகிறது. தேவை என்கிற ஒன்று பலமானதாக இருக்குமாயின் உற்பத்தியென்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். தேவையைத் தான் குறுக்குவழியில் அடையமுடிகிறதே? காசைக் கொடுத்தால் கையில் உணவு கிடைக்கிறதே? ஆழ மாக விரிவாக பேச நிறையவே விடயங்கள் உள் ளன.

முதன்மை உணவென்பதற்கு அப்பால் துணையு ணவுகளின் நிலையென்பதுகூட பெருத்தவினா வாகவே மாறிவிட்டிருக்கிறது. கறிவகைகளின் நிலை பேசவேண்டியதேயில்லை. இன்று இடியப்பம், பிட்டு ஓரளவு பழக்கத்திலுள்ளன. என்றாலும் அப்பம், தோசை, இட்லி போன்றவை கடையில் வாங்கும் பண்டங்க ளாகி விட்டன. அல்லது திடீர் தோசைமா, உடனடி அப்பமா என ஒரு இரவு முழுவதையும் எடுத்து இயற்கையாகப் புளிப்படைந்து பதமாகவரும் உணவுகளினிடத்தை அடைத்துக்கொண்டுவிட்டன. அவை செயற்கை இரசாயனக் கலவைமா சுவை யூட்டிகளினது துணையோடு உடலுழைப்பையும் நேரத்தையும் மீதமாக்கிவிட்டன.

ஆட்டுக்கல் இராணுவ தளங்களில் நீருற்றி பூப்போட்டுவைக்கும் பொருளாகிவிட்டமைக்கு அது அதற்காகப் பயன்படாமையும் ஒரு காரணமே. கொண்டாட்டங்களின் தேவைக்கான வடைக்கான உழுந்தரைப்பு இயந்திரமில்லாவிட்டால் வடை இல்லையெனுமளவில் வந்து நிற்கிறது. ஆட்டுக்கல் லையோ திருகையையோ பாவித்தபோது கிடைத்த சுவையுமில்லை. உடற்பயிற்சியுமில்லை. இடுப்பு. முழங்கால், தோள், முள்ளந்தண்டென அவற்றால் உறுதிபெற்ற உறுப்புகள் உடலாரோக்கியத்தை உச் சத்தில் வைத்திருந்தன. அதைவிட கருங்கல்லாலான மேற்படி உபகரணங்கள் தாம் தேய்ந்து தாம் அமைந் திருக்கும் ஏராளமான கனிமங்களை மாவோடு அள வாகக் கலந்து உடலை வலுவூட்டின என்பதை எத்தனைபேர் அறிவோம்?

மட்பாண்டங்கள், பித்தளைப் பாத்திரங்களது பயன் என்பது காட்சியறைக்கானதாகவே இன்றைய தலைமுறை அறிந்திருக்கிறது என்பதும் ஆரோக்கிய மானதல்ல. இன்று சூடாக்கும் பாத்திரங்களைத் தவி ர்த்துப் பார்த்தால் அனேகமாக எல்லாமே நெகிழிப் (பிளாஸ்ரிக்) பாத்திரங்களே. அதிலும் சூடாக்கும் பாத்திரங்கள் அலுமினியம் என்பதைக் கடந்து ஒட்டாப்(நொன்ஸ்ரிக்) பாத்திரங்களாகிவிட்டன. உணவைவிட அவற்றைச் சூடாக்கும்போது பிரிகை யடையும் இரசாயனங்களே உடலால் அதிகமாக

## இந்த வாரச் சொல்

# அடி

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பெரும்பாலும் வினைச் சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு பெயர்ச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகிறது.

'அவனுக்குக் கடும் அடி அடிச்சுப் போட்டாங்களாம்...'

"அவன் அந்தக் கடையில வேலை செய்யேக்க நல்லா அடிச்சுப் போட்டான்"

இதில் வரும் அடி என்பது களவைக் குறிக்கிறது.

"அந்த வாகனம் நல்லா அடிபட்டுப்போச்சுது"

இதில் வரும் அடி என்பது குறித்த வாகனம் கடுமையாகப் பாவனைக்குட்படுத்தப்பட்டுவிட்டது என்பதைக் குறிக்கிறது.

"காலையில் கோவில் மணி அடிக்க முதலே நாங்கள் எழும்பி விடுவம்"

"அவங்கள் அவனை அடி மாடாக வைத்து வேலை வாங்கினவங்கள்"

"அவன்ர அடி என்னவென்று தெரியுமோ"

இதில் வரும் அடி என்பது அவனது பரம்பரை, வம்சம், சாதி பற்றியதாக இருக்கும்

"கணக்குச் செய்யாததால் வாத்தியாரிட்ட அடி வாங்கிக் கொண்டு வந்து நிக்கிறான்"

பெயர்ச் சொல்லாக -

"ரெண்டு வாழையடிதான் வைச்சனாங்கள் அது இப்ப பெரிய தோட்டமாப் போச்சுது"



உள்ளெடுக்கப்படுகிற பேரவலம் கௌரவமாக அரங்கேற்றப்படுகிறது.

இயற்கையாகச் சேரவேண்டிய பதார்த்தங்கள் சேரவில்லை என்பதற்கப்பால் தேவையற்றவை என்பதைவிட ஆபத்தானவை அஅதிகமதிகம் சேர்க்கப்படுகிறது. ஆடம்பரமோகமும் அறியாமையும் கூட்டாக எமது பாரம்பரியங்களை மாற்றி ஆரோக்கியத்தை அறவே இல்லாததாக்கிவிடுவதை அறியாமலிருக்கிறோம். இவையே இதற்குமப்பால் எமது உள்நாட்டு உற்பத்தி வருமானத்தை இல்லாததாக்கி பண்ட இறக்குமதியை அல்லது மூலப்பொருள் இறக்குமதியையே நம்பியிருக்கும் நிலையை ஆக்கியிருக்கிறது. எமது வருவாய் போகிறது... ஆரோக்கியம் தொலைகிறது...பொருளாதாரம் வீழ்கிறது.

வேலியில்படர்கிற முசுமுசுக்கையை அறியாமல் எமதுடலில் ஏற்பட்ட நோயை விரட்டுவதாக நம்பி நோயைவிடவும் அதிகம் பாதகமான விளைவுகளைத் தருகின்ற செயற்கை இரசாயன மருந்துகளை நாடுகிறோம். குரக்கனையும் வாழைப்பூவையும் நம்பாமல் அல்லது அறியாமல் வயிற்றைத் துப்பரவாக்குவதாகக் கூறி வயிற்றை அழுக வைக்கிறோம். மயிர்க்கொட்டி பெருகுவதாகக்கூறி முருங்கைகளைத் தறித்துவிட்டு இரும்புக்(அயன்) குளிகை விழுங்குகிறோம். அது ஈரலையும் சிறுநீரகத்தையும் துருவேற்றித் தொலைக்கிறது.

இந்த முருங்கை பற்றிப் பேசுகிறபோது எமது நாட்டு முருங்கையைத் தொலைத்துவிட்டோம் என்பதை பலரால் நம்ப முடியாமலிருக்கும். இந்திய முருங்கையென்ற ஒன்றை அதிக காய் நல்லநிறை கூடியவருமானம் என்று கணக்குப்பார்த்து எமது நாட்டுமுருங்கையை இல்லாமலாக்கிவிட்ட பெருமை எம்மையேசாரும். மரபணு மாற்றிய மரக்கறிகளையும் இவ்வகைப்பட்ட கணக்கிலேயே வைக்க வேண்டியுள்ளது. பாரம்பரியமான எமது மண்ணுக்கேயான நீடித்துப் பயன்தரும் மரக்கறி இனங்களையும் நாமாகவே அழித்துவிட்டோம்.

விதை, பசளை, பூச்சிவிரட்டியென எல்லாவற்றையும் வெளியாரிடம் கையேந்திப் பெறவேண்டிய நிலைக்கே வந்து நிற்கிறோம். ஆகமொத்தத்தில் எம்மிடமிருந்த தனித்துவங்களையும் ஆரோக்கியத்தையும் மட்டுமல்ல பொருளாதாரத்தையும் இழந்திருக்கிறோம். எப்படி? பேச நிறையவேஉள்ளன.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781